வீட்டைவிட்டு வெளியேறல் சாத்தியம்

## நாம் உங்களுக்கு உதவுகிறோம்

## வன்முறையிலிருந்து பாதுகாப்பு

வன்முறையால் பாதிக்கப்பட்டிருந்தாலோ அல்லது அச்சுறுத்தப்பட்டிருந்தாலோ நீங்கள் உங்கள் குழந்தைகளுடன் ஓர் காப்பிடம் தேடிச்செல்வது உங்கள் உரிமை. உடல்ரீதியாக, உளரீதியாக, பாலியல் ரீதியாக, பொருளாதார மற்றும் வாய்த்தகராறு போன்றவற்றால் ஏற்படும் வன்முறைகள் மற்றும் வேவுபார்த்தல், கட்டாயத்திருமணம் போன்ற அனைத்தும் வீட்டுவன்முறைகளாகும்.

## தொடர்புகளுக்கு

061 681 66 33 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் எம்மை 24 மணிநேரமும் தொடர்புகொள்ளலாம். நாம் உங்களுடன் பேசி, நீங்கள் பெண்கள்விடுதிக்கு வருவது உகந்ததுதானா என்பதை முடிவெடுப்போம். தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட உடனேயே நீங்கள் கட்டாயம் பெண்கள்விடுதிக்கு வரவேண்டுமென்பதில்லை. உங்கள் தொலைபேசி அழைப்புக்கள் இரகசியமாகப் பேணப்படும். நீங்கள் அநாமதேயமாகவும் இருக்கலாம்.

## நுழைவு

சாத்தியமானால் உங்கள் உடைகள், அடையாள அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் (மருத்துவக்காப்புறுதி அட்டை, ஒப்பந்தம்) போன்றவற்றை கொண்டுவாருங்கள். மருந்துகள் மற்றும் உங்கள் குழந்தை விரும்பிய பொம்மை போன்றவற்றையும் கொண்டுவாருங்கள். அவை சாத்தியப்படாத பட்சத்தில் நாம் உங்களுக்கு முக்கியமான பொருட்களை தந்துதவுதோடு தேவையான ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கும் உதவிசெய்வோம்.

## பெண்கள்விடுதியில் பாதுகாப்பு, ஆலோசனை மற்றும் தங்குமிடம்

ஒரு பெண் ஆலோசகர் உங்களுக்காக நியமிக்கப்பட்டிருப்பார். அவர் உங்களின் எதிர்கால முன்னேற்றங்களுக்கு உதவிசெய்வார். சட்ட, அலுவலக மற்றும் நிர்வாக பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்குவதோடு இவ்விடயம் சம்பந்தமான நிபுணர்களுடனும் தொடர்பினை ஏற்படுத்தித்தருவார். எதிர்காலத்தில் என்ன வழியில் செல்வது, எந்த முடிவை எடுப்பது என்பதை தீர்மானிப்பது நீங்களே.

குழந்தைகளும் வரவேற்கப்படுவார்கள். எமது ஆலோசனைகளும் உதவிகளும் தாயாகிய உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் உண்டு. உங்கள் குழந்தையின் நாளாந்த அலுவல்களுக்கும் ஓய்வுநேர நிகழ்வுகளுக்கும் உங்களுக்கு ஒத்தாசையாக இருப்போம்.

**அவசர தொலைபேசி இலக்கம்: 061 681 66 33 (24 மணிநேரம்)**

**பெண்கள்விடுதி பாசல் ஸ்ரட்/லாண்ட்**